## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருவாரூர்

DLSA No.1998/2025 Dated:26.09.2025
Ref.TNSLSA NO.4098/S3/2025 Dated.24.09.2025.

### சட்ட தன்னார்வலர்கள் விண்ணப்பம் கோருவது சம்பந்தமான அறிவிப்பு
### (Selection of Para Legal Volunteers)

திருவாரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் அதன் கீழ் இயங்கும் வட்ட சட்ட பணிக்குழுவிற்கு 50 "சட்ட தன்னார்வலர்கள்" (Para Legal Volunteers) தேர்வு செய்வதற்கு திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டும் கீழ்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட).
2. ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்.
3. M.S.W பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்.
4. அங்கன்வாடி பணியாளர்கள்.
5. மருத்துவர்கள் (Doctors / Physicians)
6. மாணவர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள்(வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் வரை).
7. சமூக சேவை புரியும் சமூக ஆர்வலர்கள் (அரசியல் அமைப்பு சாராத தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்கள்).
8. மகளிர் சுய உதவிக்குழுகள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளிர் குழுக்கள்.
9. சிறைச்சாலைகளில் உள்ள நீண்ட கால தண்டனை அனுபவித்த படித்த மற்றும் நல்ல நடத்தை கொண்ட சிறைவாசிகள்.
10. மாவட்ட சட்டப் பணிகள் ஆணைகுழு மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுவால் சட்ட தன்னார்வலர்களாக (PLV) அடையாளம் காணப்படுவதற்கு தகுதியானவர் என்று கருதப்படும் வேறு எந்த நபரும்.

**விண்ணப்பிக்கும் முறை**

- விண்ணப்ப படிவங்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருவாரூர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது **https://tiruvarur.dcourts.gov.in/** என்ற இணைய வழியில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் **'தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருவாரூர்'** என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமோ 15.10.2025 மாலை 5.30 மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.
- நேர்காணலுக்கான தேதி, இடம் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் தொலைபேசி மூலமாகவோ, தபால் மூலமாகவோ அல்லது **https://tiruvarur.dcourts.gov.in/** என்ற இணைய வழியில் பின்னர் தெரிவிக்கப்படும்.

**குறிப்பு: மேற்கண்ட பணிக்கு சம்பளம், தொகுப்பு ஊதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது. சேவை மனபான்மை உள்ளவராக இருத்தல் வேண்டும், மதிப்பு ஊதியம் வழங்கப்படும்.**

Sd./xxxxx,

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருவாரூர்

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருவாரூர்.

## சட்ட தன்னார்வலர்களுக்கான விண்ணப்ப படிவம்

விண்ணப்பதாரர்
புகைப்படம்
(சுய சான்றொப்பம்
இடவும்)

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3 | தொடர்பு முகவரி | : | |
| 4 | கைபேசி எண் | : | |
| 5 | மின்னஞ்சல் முகவரி | : | |
| 6 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 7 | பாலினம் | : | |
| 8 | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி | : | |
| 9 | தற்போதைய பணி விபரம் | : | |
| 10 | ஏற்கனவே சட்ட தன்னார்வலராக சேவை புரிந்திருப்பின் அதன் விபரம் | : | |
| | வேறு சேவை புரிந்த அனுபவம் இருப்பின் அதன் விபரம் | : | |
| 11 | குற்ற வழக்கு நிலுவையில் இருப்பின் அதன் விவரம் | : | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்

மேற்கண்ட விபரங்கள் யாவும் உண்மையென உளமாற உறுதி கூறுகிறேன். மேலும், சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே. உத்தியோகம் இல்லை. தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த மதிப்பு ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் நன்கு அறிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்